செய்தி வெளியீடு எண். 44 /2016 நாள் 15.08..2016.

**<u>சென்னைக் குடிநீர் வாரியத்தில் சுதந்திர திருநாள் கொடி ஏற்று விழா–</u>**
**<u>குடிநீர் வாரிய முதன்மை செயலர் / மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள்</u>**
**<u>தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.</u>**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் சுதந்திர திருநாள் கொடி ஏற்று விழா இன்று (15.08.2016) சிறப்பாக நடைபெற்றது. சென்னைக் குடிநீர் வாரிய முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

வாரியத்தில் 25 வருடங்கள் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு முதன்மைச் செயலர்/மேலாண்மை இயக்குநர் அவர்கள் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.

இவ்விழாவில் சென்னைக் குடிநீர் வாரிய நிதி இயக்குநர் திரு. ஜெ.கயிலைநாதன், பொறியியல் இயக்குநர் திரு. வ.மணிவண்ணன், தலைமைப் பொறியாளர்கள் திரு.தி.லஷ்மணன், திரு.ஜி.சத்தியமூர்த்தி, திரு. ஜி.சங்கரலிங்கம், பொது மேலாளர் திரு.வ.முருகேசன், மேற்பார்வைப் பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்


திருநாள் விழா


நாள் விழா - 2
ன்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
ழிவு நீரகற்று வாரிய தலைமை



